DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Sessions Judge,
Mahalir Neethimandram, Madurai.

| | |
|---|---|
| Sessions Case | - S.C **No.101/2017** |
| Deposition of witness for | - P.W.1 |
| Name | - Kulanthaisamy |
| Father's Name/ Husband's Name | - |
| Village | - |
| Taluk | - |
| Caste | - |
| Calling | - |
| Religion | - |
| Age | - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 16.11.2021

<u>**முதல் விசாரணை:**</u>

நான் தற்போது மதுரை புதூர் பாரத் நகரில் குடியிருந்து வருகிறேன். என்னுடைய முதல் மனைவிக்கு 2 குழந்தைகள், 2-வது மனைவிக்கு 2 குழந்தைகள் உள்ளனர். முதல் மனைவி இறந்த பிறகு 2-வது திருமணம் செய்து கொண்டேன். அனைத்து குழந்தைகளுக்கும் திருமணம் ஆகி விட்டது. என்னுடைய 3 பெண்களுக்கும் திருமணம் ஆகி விட்டது. எனது மகள் பெயர் ரோஸி. என் மகள் ரோஸியை எதிரிக்கு திருமணம் செய்து கொடுத்தேன். எனது மகள் ரோஸி இறக்கும் போது, பேரனுக்கு 1 1/2 வயது, பேத்திக்கு 2 மாசம் ஆகி இருந்தது. எனது சம்பந்தி அலெக்ஸாண்டர் எதிரி எனது மகளை சுத்தியலைக் கொண்டு தலையில் அடித்ததால் தலையில் காயம் ஏற்பட்டுள்ளதாக 16.01.2016ஆம் தேதி மாலை சுமார் 4.00 மணிக்கு

சொன்னார். எனது சம்பந்தி தொலைபேசியில் எனக்கு தகவல் சொன்னார். எதிரியும் என் மகளும் சண்டை போட்டதால் தலையில் அடித்து பெரிய காயம் ஏற்பட்டுள்ளதால் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சையில் வார்டு எண்:101ல் சேர்த்துள்ளதாக சொன்னார். நானும், என் மனைவி ஜீவாவும் எனது மகளை மருத்துவமனையில் சென்று பார்த்தோம். என் மகளுக்கு தலையில் ரத்தம் ஓடியது. பேச்சு மூச்சு இல்லாமல் இருந்தார். எதிரி அடித்ததால் தலைக்காயம் என் மகளுக்கு ஏற்பட்டதால் மருத்துவமனையில் சேர்த்ததாக என் சம்பந்தி சொன்னார். எதிரி அவரது மனைவியை சந்தேகப்பட்டு, அடித்து துன்புறுத்தினார். அதற்கு முன்பாகவே இவ்வாறு நடந்துள்ளது. 14.01.2016லேயே இதே மாதிரி சண்டை நடந்துள்ளது. என் மகள் என்னிடம் இன்று காலையில் கூட என்னுடன் சண்டை போட்டு என்னை அடித்து விட்டுதான் வெளியே சென்றார் என்று என்னிடம் சொன்னார். நான் புத்தமதி சொல்லி விட்டு, பரவாயில்லை பார்த்துக் கொள்ளலாம் என சொன்னேன். இது சம்பந்தமாக என்னை காவல் துறையினர் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். அடித்தவரே காவல் நிலையத்தில் போய் ஆஜராகி விட்டார். போலீசார்தான் இதை சொன்னார்கள். போலீசார் விசாரணையில் நான் சொல்ல, சொல்ல போலீசார் எழுதினார்கள். கையெழுத்து போட்டேன். நான் சொன்னதை படித்து காண்பித்து, என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். அந்த புகார் **அ.சா.ஆ.1** ஆகும். அந்த புகாரில் என் மகளை எதிரி சந்தேகப்பட்டு சுத்தியலில் அடித்ததாக சொல்லியுள்ளேன்.

**எதிரி தரப்பு கு.வி:**

எதிரி, எதிரி குடும்பத்தார், நான், எனது குடும்பத்தார் மற்றும் சாட்சிகள் சகாயராஜ், ஜான் பீட்டர் ஆகியோர் அனைவரும் கத்தோலிக்க கிறிஸ்துவர்கள். எதிரிக்கும், எனது மகளுக்கும் கத்தோலிக்க கிறிஸ்துவ முறைப்படி திருமணம் செய்தனர். நானும், எனது குடும்பத்தார், சகாயராஜ், ஜான்பீட்டர் ஆகியோர்கள் கே.புதூர் கத்தோலிக்க ஆலயத்தை சார்ந்தவர்கள். எதிரி மற்றும் அவரது குடும்பத்தார் கீழவாசல் செயிண்ட் மேரீஸ் கத்தோலிக்க ஆலயத்தை சார்ந்தவர்கள். எங்கள் மதத்தில் திருமணம் நடப்பதற்கு முன்பு 3 முறை ஓலை வாசிப்பார்கள். அந்த ஓலை வாசிக்கும் போது, மாப்பிள்ளையோ பெண்ணோ ஆட்சேபணை தெரிவித்தால் திருமணத்தை நிறுத்தி விடுவார்கள். திருமண வாழ்க்கை சம்பந்தமாகவோ, குடும்ப சம்பந்தமாகவோ பிரச்சனைகள் ஏற்பட்டால் அதற்கு என்று எங்களுக்கு மத நீதிமன்றம் உள்ளது. திருமண ஆன நாளில் இருந்த எனது மகள் எதிரியுடன் மீனாட்சி நகர் மகாத்மா காந்தி தெரு, புது ராம்நாடு ரோட்டில் வசித்து வந்தார். இந்த சம்பவ நேரத்தில் நான் புதூர் பாரத் நகரில் குடியிருந்து வந்தேன். நானும், எனது பிள்ளைகளும் தனித்தனியாக வசித்து வந்தேன். புதூர் பாரத் நகருக்கும், மீனாட்சி

நகருக்கும் குறைந்தது 5 1/2 கி.மீ தூரம் இருக்கும். நான் இந்த சம்பவத்தின் போது, டிரைவராக வேலை பார்த்தேன் என்றாலும், அன்றைய தினம் எனக்கு உடல்நிலை சரியில்லாததால் வேலைக்கு செல்லவில்லை என்று சொன்னால் சரிதான். டிரைவர் என்பதால் எப்போதும் செல்போன் பயன்படுத்துவேன். அந்த செல்போனில் அழைப்பு வந்தாலும், சென்றாலும் பதிவாகும். 16.01.2016ஆம் தேதி அலெக்ஸாண்டர் அவரது செல்போனில் இருந்து என் செல்போனிற்கு அழைத்து சொன்னார். என்னை முதன்முதலில் போலீசார் அரசு ராஜாஜி மருத்துவமனையில் விசாரித்தார்கள். அப்போது என் மகள் உயிரோடுதான் இருந்தார். சுயநினைவு இல்லை. அவர்கிட்ட வைத்துதான் போலீசார் என்னிடம் வாக்குமூலம் வாங்கினார். அப்போது என் மனைவி, மகன் அருகில் இருந்தார்கள். அவர்களிடம் படித்து காண்பித்தார்கள். அதன்பிறகு நான் கையெழுத்து போட்டேன். அப்போது அலெக்ஸாண்டர் அங்கு இல்லை. நான் அலெக்ஸாண்டரை அரசு மருத்துவமனையில் 4.30 மணிக்கு சந்தித்தேன். அவர் என்னைக் கொண்டு போய், என் மகளிடம் காண்பித்து விட்டு போய் விட்டார். அதன்பிறகு நான் அலெக்ஸாண்டரை நான் பார்க்கவில்லை. போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கிய போது, என் மனைவியிடம் வாங்கவில்லை. என் மகனிடம் வாங்கினார்கள். போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கிய பின்பு, சுமார் 10.00 மணி அளவில் இன்ஸ்பெக்டர் வந்து நீங்கள்தானே கையெழுத்து போட்டீர்கள் என்று கேட்டார். அதன்பிறகு போலீசார் விசாரிக்கவில்லை. என்னை வருவாய் கோட்டாட்சியர் விசாரித்தார். வருவாய் கோட்டாட்சியர் என்னை விசாரித்து, நான் சொன்னதை எழுதிக் கொண்டு அதில் என்னிடம் கையெழுத்து வாங்கி கொண்டார். அப்போது என் மனைவி, மகன் அங்கிருந்தார்கள். அவர்களையும் வருவாய் கோட்டாட்சியர் தனித்தனியாக விசாரித்து, அவர்களிடமும் கையெழுத்து வாங்கி கொண்டார். வருவாய் கோட்டாட்சியர் அப்போது விசாரிக்கும் போது அலெக்ஸாண்டர் அங்கு இல்லை. போலீசாரும் அங்கில்லை. வருவாய் கோட்டாட்சியர் என்னை விசாரித்த போது, எதிரி சந்தேகப்பட்டு துன்புறுத்தியதாகவோ அதனால் அவர்களுக்குள் சந்தேகத்தின் பேரில் தகராறு இருந்ததாகவோ, சம்பவத்தைப் பற்றி தகவல் தெரிந்து கொண்டதாகவோ சொல்லியுள்ளேன். இந்த வழக்கில் முதன்முதலில் கொடுக்கப்பட்ட தகவல் மறைக்கப்பட்டு பின்னிட்டு அ.சா.ஆ.1 தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்லியபடி எதிரிக்கும், அவர் மனைவிக்கும் எந்தவிதமான விரோதமும் கிடையாது என்றும், எதிரியின் அப்பா அலெக்ஸாண்டர் நான் சொன்னவாறு எந்த தகவலும் சொல்லவில்லை என்றும், என் மகளுக்கு நான் சொல்லியவாறு எந்த காயமும் ஏற்படவில்லை என்றும், பின்னிட்டு பணம் பெறும் நோக்கத்தோடு இந்த வழக்கு எதிரியின் மீது ஜோடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மருத்துவமனையில் வைத்துதான் அன்றைய தினமே போலீசார் எதிரி காவல் நிலையத்தில் சரணடைந்து

விட்டார் என்று சொன்னார்கள். நான் எங்களது ஆலயத்தில் உள்ள பங்குத்தந்தையிடமோ, நீதிமன்றத்திலோ என் மகளுக்கும், மருமகனுக்கும் விரோதம் இருந்தது என்று நான் சொல்லவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டுஅவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு ”சரி” என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Sessions Judge,
Mahalir Neethimandram, Madurai.

| | |
|---|---|
| Sessions Case | - S.C **No.101/2017** |
| Deposition of witness for | - P.W.2 |
| Name | - Jeeva |
| Father's Name/ Husband's Name | - |
| Village | - |
| Taluk | - |
| Caste | - |
| Calling | - |
| Religion | - |
| Age | - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 16.11.2021

**முதல் விசாரணை:**

நான் தற்போது மதுரை பாரத் நகரில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர் ஆவார். ஆஜர் எதிரி என் மகளின் கணவர். எனக்கு 2 பெண் குழந்தைகள் உள்ளது. எனது மகள் ரோஸியை தெப்பக்குளம் மீனாட்சி நகரில் எதிரிக்கு திருமணம செய்து கொடுத்தோம். சம்பவத்தின் போது, என் பேரனக்கு 1 1.̇.2 வயது, பேத்திக்கு 4 மாசம். எதிரி எனது மகளை சந்தேகப்பட்டு, அடிக்கடி சண்டை போட்டு வந்தனர். எனது கணவர் என் மகள் வீட்டிற்கு சென்று வந்து அறிவுரை சொல்லி வருவார். 16.01.2016 அன்று எதிரியின் தகப்பனார் மாலை சுமார் 4.00 மணிக்கு எனது கணவரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு என் மகளுக்கும், எதிரிக்கும் சண்டை வந்ததாகவும், அதனால் எனது மகளின் தலையில் சுத்தியலால் எதிரி அடித்ததாகவும், எனது மகளை மருத்துவமனையில் சேர்த்ததாகவும் கூறினார். எனது மகளை மருத்துவமனையில் சென்று பார்த்த போது, ரத்த வெள்ளத்தில் இருந்தார். பேச்சு மூச்சு இல்லாமல் இருந்தார். என் சம்பந்தி அலெக்ஸாண்டர் மருத்துவமனையில் எனது மகளை சேர்க்கும் போது என் மகள் கீழே விழுந்து அடிபட்டு தலையில் ரத்தம் வருவதாக சொல்லி சேர்த்துள்ளதாக சொன்னார். அலெக்ஸாண்டர் அங்கு இல்லை. நாங்கள் போன சமயத்தில் அலெக்ஸாண்டர் அங்கு இருந்தார். 11 நாட்கள் என் மகளுக்கு சிகிச்சை அளித்தார்கள். எதிரி வீட்டில் என் மகள் நன்றாகத்தான்

இருந்தார். எதிரி என் மகளை சந்தேகப்பட்டு அடித்து வந்தார். கைக்குழந்தை இருக்கும் போதே என் மகளை அடித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு கு.வி:**

நான், இறந்து போன என் மகள் ஆலயத்திற்கு முறையாக போய் வருவோம். என் கணவரின் முதல் மனைவியின் 2 குழந்தைகளும் தனித்தனியாக வாழ்கிறார்கள். அந்த முதல் மனைவிக்கு ஒரு பெண்ணும், ஒரு பையனும் உண்டு. அந்த மகளும், மகனும் நாங்கள் இருக்கும் பகுதியில்தான் வசிக்கிறார்கள். என்னை வருவாய் கோட்டாட்சியர் விசாரித்தார். என்னை விசாரித்தது போல் என் கணவரையும், என் மகளையும் விசாரித்தார்கள். தனித்தனியாக விசாரித்து, வாக்குமூலம் வாங்கி கொண்டு கையெழுத்து வாங்கினார்கள். நடந்த சம்பவம் குறித்து என் கணவர் என்னுடன் வீட்டில் இருக்கும் போதுதான் அலெக்ஸாண்டர் என் கணவரிடம் மாலை 4.00 மணிக்கு போன் பண்ணி சொன்னார். என் வீட்டிற்கும், மருத்துவமனைக்கும் 5.கி.மீ தூரம் இருக்கும். நான் முதன்முதலில் போலீசாரை மாலை 6.30 மணி அளவில் மருத்துவமனையில் வைத்து பார்த்தேன். அப்போது போலீசார் என்னை என்ன நடந்தது என்று விசாரித்தார்கள். நான் சொன்னதை போலீசார் எழுதிக் கொண்டார்கள். கையெழுத்து வாங்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கும் போது, அலெக்ஸாண்டர் அங்கு இல்லை. போலீசார் விசாரித்த பின்பு வருவாய் கோட்டாட்சியர் விசாரித்தார். வருவாய் கோட்டாட்சியர் விசாரணையில் என் மகளுக்கும், அவரது கணவருக்கும் சந்தேகத்தின் பேரில் தகராறு இருந்ததாக சொல்லியுள்ளேன். என் மகளுக்கும், எதிரிக்கும் எந்தவிதமான தகராறும் இல்லை என்றும், சந்தேகம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கு ஒரு காரணம் வேண்டும் என்பதற்காக சந்தேகம் இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வருவாய் கோட்டாட்சியர் விசாரணையில் எதிரி மற்றும் அவரது பெற்றோர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டேன். என் மகள் சம்பவத்திற்கு பிறகு 11 நாட்கள் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். சிகிச்சையில் இருக்கும் போது, வருவாய் கோட்டாட்சியரோ, நீதித்துறை நடுவரோ என் மகளை பார்த்தார்களா என்றால் வந்து பார்த்தார்கள். நான் சொல்வது போல், எதுவும் கிடையாது என்றும், என் கணவர் மற்றும் என் மகன் ஆகியோர் சாட்சி வேணும் என்பதற்காக சொல்லிக் கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Sessions Judge,
Mahalir Neethimandram, Madurai.

| | |
|---|---|
| Sessions Case | - S.C **No.101/2017** |
| Deposition of witness for | - P.W.3 |
| Name | - Victor Samuvel |
| Father's Name/ Husband's Name | - |
| Village | - |
| Taluk | - |
| Caste | - |
| Calling | - |
| Religion | - |
| Age | - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 16.11.2021

**முதல் விசாரணை:**

நான் தற்போது கடச்சனேந்திலில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1.2 என் அப்பா, அம்மா. இந்த வழக்கில் இறந்து ரோஸி என் தங்கை ஆவார். எதிரி என் தங்கையின் கணவர். கடந்த 16.01.2016 அன்று என் தங்கை ரோஸியை எதிரி தலையில் சுத்தியலால் அடித்து காயம்பட்டதாக என் அப்பா போன் பண்ணினார். நான் மருத்துவமனைக்கு வந்த போது என் தங்கை சுயநினைவில்லாமல் இருந்தார். இது பற்றி என் அப்பாவிடம் நான் கேட்டதற்கு ஆஜர் எதிரி ரோஸியை சுத்தியலால் தலையில் அடித்ததாகவும், இந்த தகவலை எதிரியின் அப்பா, என் அப்பாவிடம் சொன்னதாக சொன்னார். (எதிரி தரப்பில் வழக்கறிஞர் செவிவழி சாட்சி என்பதால் இதை பதிவு செய்வதற்கு ஆட்சேபிக்கப்பட்டது. மேற்படி ஆட்சேபணை

வழக்கின் இறுதி சமயத்தில் பரிசீலிக்கப்படும்.) அதற்கு 2 நாட்களுக்கு முன்பு எதிரிக்கும், அவர் மனைவிக்கும் சண்டை நடப்பதாக என் அப்பா சொன்னார். எதிரி தனது மனைவியை சந்தேகப்பட்டு அடித்ததாக என் அப்பா சொன்னார். 2 நாட்களுக்கு முன்பு என் அப்பாவிடம் கேட்டதற்கு என் தங்கை எதிரியினால் அடிக்கப்படுவதாக சொன்னார். அதனால் இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கலாம் என்று என் அப்பாவிடம் சொன்னேன். அதற்கு என் அப்பா மகளின் வாழ்க்கை கெட்டு விடலாம் என்றும், நானே சமாதானம் செய்து வைக்கிறேன் என்று சொல்லிவிட்டார். சம்பவத்திற்கு பிறகு போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு கு.வி:**

அலெக்ஸாண்டரின் சகோதார் ஜெயபாலின் மகளைத்தான் நான் திருமணம் செய்துள்ளேன். என் வீட்டிற்கும், என் அப்பா வீட்டிற்கும் சுமார் 2 1.'.2 கி.மீ தூரம் இருக்கும். அரசு மருத்துவமனைக்கும், எனது வீட்டிற்கும் சுமார் 6 கி.மீ தூரம் இருக்கும். நான் சம்பவ சமயத்தில் ராஜா முத்தையா மன்றத்திற்கு அருகில் உள்ள டாடா டொகோமோ அலுவலகத்தில் பணிபுரிந்தேன். சம்பவ நடந்த அன்று நான் வேலைக்கு செல்லவில்லை. வீட்டில்தான் இருந்தேன். எனக்கு என் அப்பா அவரது செல்போனில் இருந்து எனது செல்போனிற்கு சம்பவம் பற்றி தகவல் சொன்னார். போலீசார் என்னிடம் அரசு மருத்துவமனையில் சம்பத்தன்று மாலை 4.30யிலிருந்து 5.00 மணிக்குள் என்னை விசாரித்தார்கள். அவ்வாறு விசாரித்த போது, எனது செல்போனையும், என் அப்பாவின் செல்போனையும் வாங்கி பார்க்கவில்லை. இருவருடைய செல்போன் நம்பரையும் வாங்கி கொண்டார்கள். நான் மருத்துவமனைக்கு சென்ற போது மருத்துவர் மற்றும் நர்ஸ்கள் இருந்தார்கள். நான் சென்ற போது போலீசார் இருந்தார்கள். போலீசார் நான் சொன்னதை எழுதிக் கொண்டார்கள். நான் கையொப்பம் செய்தேன். அதன்பிறகு வருவாய் கோட்டாட்சியர் விசாரித்து, என்னுடைய வாக்குமூலத்தை எழுதிக் கொண்டு என்னிடம் கையெழுத்து வாங்கி கொண்டார். வருவாய் கோட்டாட்சியர் என்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து விசாரித்தார். அப்போது போலீசார் இருந்தனர். அலெக்ஸாண்டர் அங்கு இருந்தார். வருவாய் கோட்டாட்சியர் என்னையும், என் அப்பா, அம்மாவையும், அலெக்ஸாண்டரையும் போலீசார் முன்னிலையில்தான் விசாரித்தார். நான் முதல் விசாரணையில் சொல்வது போல் என் அப்பா என் தங்கையை அடிப்பதாக சொன்னதாகவும், அதனால் இது சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கலாம் என்று சொன்னேன் என்றும், என் அப்பா தன் மகளின் வாழ்க்கை கெட்டு விடும் என்பதால் வேண்டாம் என்று சொன்னார் என்று நான் போலீஸ் விசாரணையில் சொன்னேன். நான் சொன்னது போல் எதுவும் நடக்கவில்லை என்றும்,

எனக்கு எதுவுமே தெரியாது என்றும், இந்த வழக்கில் சாட்சி வேண்டும் என்பதற்காக என்னையும், என் அம்மா, அப்பாவையும் சாட்சிகளாக போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டுஅவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு ”சரி” என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை.